**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 257/2025**

**Prosecution Witness : 5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. பாலமுருகன்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. அழகுமலை** | **Calling** | : | **காவல் ஆய்வாளர், திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலையம்** |
| **Village** | : | | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **52** |
| | | | **Dated** | : | **14.07.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**3–ம் எதிரி இறந்துவிட்டார். 1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர்.**

**முதல் விசாரணை :–**

நான் தற்போது திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்துவருகிறேன். இவ்வழக்கின் சாட்சிகள் பிறழ் சாட்சிகள் ஆகிவிட்டதாலும், வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான ஆய்வாளர் திரு.சுரேஷ் பணிமாறுதலாகி வேறு மாவட்டத்திற்கு சென்றுவிட்டதாலும், அவரது கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு பரிட்சையம் என்பதாலும் ஆவணங்களின் அடிப்படையில் அவர்

சார்பாக சாட்சியம் அளிக்க மனு செய்து அதன்பேரில் சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 07.02.2011ம் தேதி மாலை 4.30 மணியளவில் திண்டுக்கல் நகர் வடக்கு காவல்நிலைய உதவி ஆய்வாளராக திரு.பன்னீர் செல்வம் பணியில் இருந்தபோது, இவ்வழக்கின் புகார்தாரர் திருமதி.நிர்மலாராணி நிலையம் ஆஜராகிக்கொடுத்த எழுத்து மூலமான புகாரைப் பெற்று நிலைய குற்ற எண்.181/201, இ.த.ச. பிரிவுகள் 341 மற்றும் 307–ன்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3**.

பின்னர் அன்றைய தினம் இரவு 7.45 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஜாகீர் உரைசம் மற்றும் ராமசாமி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பார்வை மகஜர் **அ.சா.ஆ.4** மற்றும் பார்வை மகஜர் **அ.சா.ஆ.5**. பின்னர் புகார்தாரர் திருமதி.நிர்மலாராணி, சாட்சிகள் எழில்மாறன், ரமேஷ், அப்துல்லா, தமணன், ஜாகீர் உரைசம் மற்றும் ராமசாமி ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

பின்னர் 08.02.2011ம் தேதி காலை 10.30 மணியளவில் திண்டுக்கல் – மதுரைரோடு, தோமையார்புரம் பேருந்து நிறுத்தம் அருகில் வைத்து 1, 2 எதிரிகளைக் கைது செய்து விசாரித்தபோது, 1–ம் எதிரி இவ்வழக்கு குற்ற செயலில் ஈடுபட்டதை ஒப்புக் கொண்டு தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் மரிய லூயிஸ் மற்றும் கஸ்பார் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்துள்ளார். மேற்படி ஒப்புதல் வாக்கமூலத்தில் 1–ம் எதிரி சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட கத்தியை

குட்டைகுளம், பாத்திமா மருத்துவமனை பின்புறம் மறைத்து வைத்திருப்பதாக கூறியதன்பேரில், மேற்படி சாட்சிகளுடன் மேற்படி இடத்திற்கு சென்று 1–ம் எதிரி எடுத்து ஆஜர் செய்த ஒரு கத்தியையும், 2–ம் எதிரி எடுத்து ஆஜர் செய்த மற்றொரு கத்தியையும் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றியுள்ளார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.6**. கைப்பற்றுதல் அத்தாட்சி **அ.சா.ஆ.7**.

பின்னர் 1 மற்றும் 2 எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துவிட்டு, கைப்பற்றப்பட்ட இரண்டு கத்திகளையும் படிவம்–95ன் மூலமாக நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளார். அந்த படிவம்–95 **அ.சா.ஆ.8**. 1–ம் எதிரி மூலமாக கைப்பற்றப்பட்ட கத்தி **சா.பொ.1.** 2–ம் எதிரி மூலமாகக் கைப்பற்றப்பட்ட கத்தி **சா.பொ.2**. பின்னர் சாட்சிகள் மரிய லூயிஸ் மற்றும் கஸ்பார் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

பின்னர் 10.02.2011ம் தேதி மேட்டுப்பட்டி, பாஸ்கோ மேடை அருகே வைத்து 3–ம் எதிரியை கைது செய்து விசாரித்தபோது, 3–ம் எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் குருவராஜ், மாயவன் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்துள்ளார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் சம்பவத்திற்கு பயன்படுத்திய கத்தியை மேட்டுப்பட்டி, பாஸ்கோ மேடை பின்புறம் உள்ள கழிவு நீர் ஓடையில் மறைத்து வைத்திருப்பதாக மேற்படி சாட்சிகளுடன் மேற்படி இடத்திற்கு சென்று 3–ம் எதிரி எடுத்து ஆஜர் செய்த ஒரு கத்தியை அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றியுள்ளார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.9**. கைப்பற்றுதல் அத்தாட்சி **அ.சா.ஆ.10**.

பின்னர் 3–ம் எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துவிட்டு, கைப்பற்றப்பட்ட கத்தியை படிவம்–95ன் மூலமாக நீதிமன்றத்தில்

ஒப்படைத்துள்ளார். அந்த படிவம்–95 **அ.சா.ஆ.11**. 3–ம் எதிரி மூலமாக கைப்பற்றப்பட்ட கத்தி **சா.பொ.3.** பின்னர் சாட்சிகள் குருவராஜ் மற்றும் மாயவன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் வழக்கினை மேல் விசாரணைக்காக ஆய்வாளர் திரு.சுரேஷ் அவர்களின் பார்வைக்கு வைத்துள்ளார்.

இவ்வழக்கினை மேல் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட ஆய்வாளர் திரு.சுரேஷ் முதல் விசாரணையை உறுதி செய்து கொண்டு காயம்பட்ட எழில்மாறனுக்கு சிகிச்சை அளித்த திண்டுக்கல் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.பாபு அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு பெற்றுள்ளார். அந்த விபத்து பதிவேடு **அ.சா.ஆ.12**. அந்த விபத்து பதிவேட்டில் காயம்பட்ட எழில்மாறன் மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பப்பட்ட நிலையில் அவர் மேல் சிகிச்சைக்கு செல்லாததால், அவரது காயத்தின் தன்மை குறித்து கருத்துரை வழங்க இயலாது என்று மருத்துவர் சான்று வழங்கியுள்ளார். பின்னர் முதல் விசாரணை மேற்கொண்ட சார்பு ஆய்வாளர் திரு.பன்னீர் செல்வன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கில் தனது புலன் விசாரணையை முடித்து 14.07.2011 ம் தேதி எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 341மற்றும் 307 உ/இ 34–ன் படி குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் அசா.1நிலையம் ஆஜராகி புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. புகாரானது வழக்கிற்காக பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சார்பு ஆய்வாளர் சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும், அங்கு பார்வை

மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றாலும், சாட்சிகள் யாரையும் விசாரணை செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

பார்வை மகஜர், மாதிரி வரைபடம் உள்ளிட்ட வழக்கு ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக பின்னிட்டு நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகள் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் கைது செய்யப்படவில்லை என்றும், எந்தவொரு எதிரியும், எந்தவொரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும், அதன் அடிப்படையில் எந்தவித வழக்கு சொத்துக்களும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. சாட்சிகளை சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது தவறான குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:–** இல்லை.

Taken down by me/before me in open court on 14.07.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

INBAKARTHICK Digitally signed by INBAKARTHICK Date: 2026.07.14 17:56:50 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.